2012 நவம்பர் 1]

பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வின் அடிப்படையில் விதிகள் எல்லாம் பூர்த்தியாகும் எனில், அவருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

ஆவின் பால்

***4891—திரு. ஆர். சுந்தர்ராஜன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் உள்ள ஆவின் பால் பற்றாக்குறையைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மக்கள் அனைவருக்கும் பற்றாக்குறையின்றி தரமான பால் தாராளமாகக் கிடைக்க வேண்டும், பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்த பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் மாபெரும் சிறப்புத் திட்டமான விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு 22 இலட்சம் லிட்டர் என்ற அளவிலேயே, பால் கொள்முதல் செய்யப்பட்ட நிலையினை மாற்றி, . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 27 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தி நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் பால் அதிகமாகக் கொள்முதல் செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை புரிந்து வருகிறது. அதுமட்டுமின்றி, கிராம அளவில் சங்கங்களின்மூலம் தினசரி 4 இலட்சம் லிட்டர் வீதம் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், நாளொன்றுக்கு 31 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்திருக்கின்ற இலக்கை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலே அடைந்து ஆவின் வரலாற்றில் புதிய சரித்திர சாதனை புரிந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் கொள்முதல் செய்யப்படும் 27 இலட்சம் லிட்டர் பாலில் சென்னையில் மட்டும் 1,224 விற்பனை நிலையங்கள்மூலம் நாளொன்றுக்கு 11 இலட்சம் லிட்டர் பாலும், மேலும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் பாலும் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 6 இலட்சம் லிட்டர் பாலானது பால் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோக, பொதுமக்களிடமிருந்து பால் தேவைக்கான கோரிக்கை பெறப்பட்டவுடன் தேவைப்படும் இடங்களில் பாலகங்கள் அமைத்தும், ஏஜென்ட் உரிமை வழங்கியும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மற்றும் பொதுமக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் தேவையிருப்பின் ஆவின் நிருவாகத்தின் 16 மண்டலங்கள் மூலமும் தொலைபேசி எண் மூலமும் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பால் அவர்களின் இல்லத்திற்கே சென்று விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் பால் தேவைக்கான கோரிக்கை மனு அளித்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று, ஆணை பெற்று தங்களுக்குத் தேவைப்படும் இடங்களில் பால் விற்பனை ஏஜென்ட் உரிமம் மற்றும் பாலகங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நிரந்தரம் இல்லாத 24,000 பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்காகக் கமிட்டி அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே கமிட்டி அமைக்கப்பட்டு, அவர்களை எப்படி பணியில் அமர்த்தலாம் என்பது ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழகத்தில் விற்கப்படுகிற தனியார் பால்களில் நம்முடைய குலை நடுங்கச் செய்கிற அளவுக்கு ஏராளமான கலப்படங்கள், இரசாயனப் பொருட்கள் உள்பட கலக்கப்படுகின்றன என்ற தகவல் வந்தது. அவற்றை ஒழிப்பதோடு, மைசூர் பாகு, ஐஸ்கிரீம், யோகர்ட் போன்ற பால் உணவுப் பொருட்களை ஆவின் நிறுவனம் போதுமான அளவிற்கு உற்பத்தி செய்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்வதை உறுதிப்படுத்துவாரா என்பதையும் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *பால் கலப்படத்தைத் தடுக்க, அதாவது புதியதாக பால் பண்ணையினைப் பதிவு செய்யவும்*

தனியார் பால் பண்ணையினை ஆய்வு செய்யவும், பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை M.M.P.O. சட்டத்தின்படி பால்வளத் துறையின் ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி பாலின் விற்பனைத் தரம் குறித்து ஆய்வு செய்து, தரமற்ற பால் விற்பனை செய்யும் நிறுவனத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

2006 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்த உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி 2011 இறுதியில், இந்தப் பணிகள் சுகாதாரத் துறையின் ஆணையரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. அந்த அதிகாரத்தை மீண்டும் பால் வளத் துறை ஆணையருக்கு முழுமையாக வழங்க வேண்டி கோரிக்கையை சுகாதாரத் துறைச் செயலாளருக்கும், மத்திய அரசு செயலாளருக்கும் அனுப்பப்பட்டு அது நடவடிக்கையில் உள்ளது. தற்போது பால் கலப்படம் குறித்து சுகாதாரத் துறை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, ஆவின் நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்ற பால் பொருட்கள் அத்தனையும் ஆங்காங்கே பார்லர்கள் மூலமாகவும் மற்றும் அவர்களின் விருப்பத்தின் பேரிலும், கோரிக்கையின் பேரிலும் அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அதை அவர்களுக்கு விநியோகம் செய்கின்ற ஒரு நடவடிக்கையை ஆவின் நிர்வாகம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கேள்வியும் பாலில் கலப்படம் அதிகமாக இருக்கிறது, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பது குறித்துதான். ஏற்கெனவே இதற்கான பதிலை அமைச்சர் அளித்துவிட்டார். எனவே கேள்வி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.